## சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்– மாண்புமிகு அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அவர்களின் அறிவிப்பு–2017–2018–ஆம் கல்வியாண்டில் 11 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 3 ஆதிதிராவிடர் நல பள்ளிகளை அவற்றின் அடுத்த நிலைக்கு நிலை உயர்த்துதல் – நிருவாக ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 62

நாள்: 11.10.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி – புரட்டாசி திங்கள்
25–ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க2/12012/2017,
நாள் 01.06.2017 மற்றும்19.07.2017.

******

ஆணை :–

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் 18.07.2017 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்குறிப்பிடப்படும் அறிவிப்பும் ஒன்றாகும்:–

> "இத்துறையின் கீழ் இயங்கும் ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் உயர்கல்வி பயில தங்களது இருப்பிடத்திலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று பயிலும் நிலை உள்ளது. எனவே, கீழ்க்காணும் பள்ளிகள் 2017–2018–ஆம் கல்வி ஆண்டில் ரூ.14.06 கோடி மதிப்பில் மாநிலத் திட்ட நிதியின் கீழ் நிலை உயர்த்தப்படும்."

(அ) ஐந்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்துதல்

சேலம் மாவட்டம்

(i) தாழ்வள்ளம்
(ii) புதூர்
(iii) சூலாங்குறிச்சி
(iv) ஆலடிப்பட்டு
(v) தாத்தியம்பட்டி ஆகிய பள்ளிகள்

(த.பி.பா)

(ஆ) நான்கு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் மற்றும் ஓர் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி ஆகியவற்றை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்

<u>சேலம் மாவட்டம்</u>

(i) கொடுங்கல்
(ii) குன்னூர்
(iii) அடிமலைபுதூர்

<u>ஈரோடு மாவட்டம்</u>

(iv) கொங்காடை

<u>திருவள்ளூர் மாவட்டம்</u>

(v) வளசரவாக்கம் ஆகிய பள்ளிகள்

(இ) இரண்டு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் இரண்டு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்.

<u>சேலம் மாவட்டம்</u>

(i) அருநூத்துமலை
(ii) கரியகோயில் வளவு

<u>நாகப்பட்டினம் மாவட்டம்</u>

(iii) மாதானம்

<u>திருவள்ளூர் மாவட்டம்</u>

(iv) தேர்வாய் ஆகிய பள்ளிகள்

2. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1341 ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் தற்போது செயல்பட்டு வருகின்றன எனவும், இத்துறைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் அனைவரும் உயர் கல்வி பயில தங்களது இருப்பிடத்திற்கு வெகு தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு சென்று பயிலும் நிலை ஏற்படுகிறது எனவும், இதனால் காலவிரயமும் பண விரயமும் ஏற்படுகிறது எனவும், மாணவர்கள் தங்களது இருப்பிடத்திற்கு அருகே உயர்கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கத்திற்காக இத்துறைப் பள்ளிகளை அவற்றின் அடுத்த நிலைக்கு நிலை உயர்த்தும் அவசியம் ஏற்படுகிறது எனவும் தெரிவித்து, சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, தான் ஏற்கனவே அரசுக்கு அனுப்பிய கருத்துருவின் அடிப்படையில் 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 4 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 1 ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிகள் ஆகிய பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தி ஆணை வழங்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், இவ்வாரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **11** அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் **3** ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை நிலை உயர்த்தி அரசு ஆணையிடுகிறது:–

அ. நடப்பு கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை ஏற்கனவே முடிவுற்ற நிலையில் எதிர்வரும் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கைக்கேற்ப ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள், அறைகலன்கள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் ஒப்பளிப்பு செய்வது குறித்து ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் ஆகியோரிடமிருந்து உரிய கருத்துரு பெற்று தனியாக ஆணை வெளியிடப்படும்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பளிப்புக்கு தற்போது இயங்கிவரும் பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிட எண்ணிக்கை, அறைகலன்கள் கருத்தில் கொள்ளப்படும்.

இ. தரம் உயர்த்தப்படும் பள்ளிகளின் கூடுதல் வகுப்பறை தேவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, புதிய வகுப்பறைகளுக்கான இடம் கண்டறியப்பட்டு, தாட்கோ நிறுவனம் மூலம் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்படும்.

ஈ. பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் கட்டடப் பணிக்கான நிதியினை மத்திய அரசு நிதியுதவித் திட்டங்களின் கீழ் பெற ஏதுவாக உரிய கருத்துருவை பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

உ. ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்கான கூடுதல் வகுப்பறைக்கான செலவினை NABARD கடன் உதவியுடன் மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநர் நடிவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

4. இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளை அவற்றின் அடுத்த நிலைக்கு நிலையுயர்த்துவதன் மூலம் ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவின நிதி ஒப்பளிப்புக்கான கருத்துருவை அரசுக்கு உரிய நேரத்தில் அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.**49796**/நிதி(ஆதி(ம)பந)/**2017**, நாள்.**07.10.2017**–இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை – **600 005.**
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – **600 005.**

(..4)

## இணைப்பு - 1

(அரசாணை (நிலை) எண்.62, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை, நாள்:11.10.2017)

**2017–2018 ஆம் கல்வியாண்டில் அடுத்த நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் ஆதி திராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளின் பட்டியல்**

(அ) நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகள்:-

**சேலம் மாவட்டம்**

i. தாழ்வள்ளம்
ii. புதூர்
iii. சூலாங்குறிச்சி
iv. ஆலடிப்பட்டு
v. தாத்தியம்பட்டி

(ஆ) உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் நான்கு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் மற்றும் ஓர் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி :-

**சேலம் மாவட்டம்**

i. கொடுங்கல்
ii. குன்னூர்
iii. அடிமலைபுதூர்

**ஈரோடு மாவட்டம்**

iv. கொங்காடை

**திருவள்ளூர் மாவட்டம்**

v. வளசரவாக்கம்

(இ) மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் இரண்டு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் இரண்டு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள்:-

**சேலம் மாவட்டம்**

i. அருநூத்துமலை
ii. கரியகோயில் வளவு

**நாகப்பட்டினம் மாவட்டம்**

iii. மாதானம்

**திருவள்ளூர் மாவட்டம்**

iv. தேர்வாய்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் / சேலம் / ஈரோடு / நாகப்பட்டினம்.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருவள்ளூர் / சேலம் / ஈரோடு / நாகப்பட்டினம்.
சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள். (ஆதி திராவிடர் நல இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்டக் கருவூல அலுவலர், திருவள்ளூர் / சேலம் / ஈரோடு / நாகப்பட்டினம்.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35. (பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் பண வரவுகள்)
சென்னை – 600 018.

நகல்

முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலைத் தனிச் செயலாளர்,
சென்னை – 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந2.பமே1)துறை,
சென்னை–600 009. (உரிய கருத்துரு பெற்று நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது)
நிதித் (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது II/மையஆபி) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.